©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.00 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 175A] சென்னை, திங்கட்கிழமை, மார்ச் 21, 2022
பங்குனி 7, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2022 ஆம் ஆண்டு **மார்ச்** திங்கள் 21–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 16/2022**

**பொது நலன் கருதி ஈரோட்டிலுள்ள சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசுக்கு மாற்றம் செய்தல் மற்றும் ஒப்படைத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளை வழங்குவதற்கான ஒரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, அரசு, அறிவிக்கை வாயிலாக குறிக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தின், தறுவாயின் பொருள் வேறு பொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

a) “குறிக்கப்பட்ட நாள்” என்பது இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் என்று பொருள்படும்;

b) “கல்லூரி” என்பது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டவாறான நிலம் மற்றும் கட்டடங்களுடன் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு என்று பொருள்படும்;

c) “ஆணையாளர்” என்பது 6–ஆம் பிரிவின்படி பணியமர்த்தப்பட்ட ஆணையாளர் என்று பொருள்படும்;

d) “அரசு” என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

e) “உரித்தமுடைய நபர்” என்பது இந்தச் சட்டத்தின்படி அரசிடம் இந்த கல்லூரியின் ஒப்படைப்பின் காரணமாக வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டில் உரித்தம் கோரும் அல்லது கோர உரிமையுள்ள நபர் அனைவரையும் உள்ளடக்கும்.

கல்லூரியின் மாற்றம் மற்றும் ஒப்படைப்பு.

**3.** குறிக்கப்பட்ட நாள் அன்றும் அது முதற்கொண்டும், கல்லூரி மற்றும் உரித்தமுடைய நபர்களின் உரிமை, உரிமை மூலம் மற்றும் உரித்தமானது அரசுக்கு மாற்றம் செய்யப்பட்டதாக மற்றும் முழுமையாக அளிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

ஒப்படைப்பின் விளைவு.

**4.** (1) 3–ஆம் பிரிவின்படி அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கல்லூரியின் சொத்துக்கள் அனைத்தும், அவ்வாறு ஒப்படைக்கப்பட்டதன் மூலம், விடுவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பொறுப்பு, கடப்பாடு, அடைமானம், பற்று, மீள் உரிமை அல்லது அவற்றை பாதிக்கும் பிற வில்லங்கம் எதிலிருந்தும் மற்றும் எவ்வகையிலும் அத்தகைய சொத்துக்களின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் அல்லது அத்தகைய சொத்துக்களின் முழுமை அல்லது பகுதி எதன் தொடர்பாக சொத்துப் பேணுநர் எவரையும் பணியமர்த்தும் நீதிமன்றம் எதனின் பற்றுகை, தடைக்கட்டளை அல்லது தீர்ப்புரை அல்லது ஆணை எதுவும் திரும்ப பெற்றதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) கல்லூரி தொடர்பான அங்கீகாரம், இணைப்பு, உரிமம் அல்லது பிற ஆவணம் எதுவும் குறிக்கப்பட்ட நாளுக்கு முன்பு, எந்த நேரத்திலும் உரித்தமுடைய நபரின் பெயரிலோ, அல்லது கல்லூரியின் பெயரிலோ வழங்கப்பட்டுள்ளவிடத்து, அரசு அல்லது பிற அதிகார அமைப்பு எதுவும், அத்தகைய தேதியிலும் அது முதற்கொண்டும், குறிக்கப்பட்ட உரித்தமுடைய நபரிடம் இருக்கும் அத்தகைய அங்கீகாரம், இணைப்பு, உரிமம் அல்லது பிற ஆவணம், ஏதேனும் இருப்பின், அத்தகைய அங்கீகாரம், இணைப்பு, உரிமம் அல்லது பிற ஆவணம் அதற்கு வழங்கப்பட்டதைப் போல மாற்றியமைக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்டு மற்றும் உரித்தமுடைய நபர், எவரேனும் இருப்பின் அவர் அத்தகைய உரிமம் அல்லது அத்தகைய பிற ஆவணம் எதையும் வைத்திருப்பதைப் போன்று மீதமுள்ள கால அளவிற்கு அத்தகைய அங்கீகாரம், இணைப்பு, உரிமம் அல்லது பிற ஆவணத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்படி அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள சொத்து எதனின் அடைமானம் பெற்றவர் ஒவ்வொருவரும் மற்றும் அத்தகைய சொத்து எதன் தொடர்பாகவும் பற்று, மீள் உரிமை அல்லது பிற உரித்தம் வைத்திருக்கும் நபர் ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்கள் காலத்திற்குள் அத்தகைய அடைமானம், பற்று, மீள் உரிமை அல்லது பிற உரித்தத்தின் தகவல் ஒன்றினை எழுத்து மூலம் ஆணையருக்கு அளித்தல் வேண்டும்.

(4) ஐயப்பாடுகளை நீக்குவதற்காக, (3)–ஆம் உட்பிரிவில் குறிக்கப்பட்ட சொத்து எதனின் அடைமானம் பெற்றவர் அல்லது அத்தகைய சொத்து எதிலும் பற்று, மீள் உரிமை அல்லது பிற உரித்தம் எதுவும் வைத்திருக்கும் பிற நபர் எவரும் அவரது உரிமைகள் மற்றும் உரித்தங்கள், அடைமானத் தொகையின் செலுத்தும் அல்லது முழுமையான அல்லது பகுதியாக நிலுவைத் தொகைகளுக்கு இணங்க இச்சட்டத்தின்படி செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகையிலிருந்து கோர உரிமையுடையவராதல் வேண்டும்.

குறித்த சில பணியாளர்களின் மாற்றம்.

**5.** (1) குறிக்கப்பட்ட நாளுக்கு முன்பு, கல்லூரியில் பணிபுரிந்து வந்த நபர் ஒவ்வொருவரும், கூறப்பட்ட தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் அரசுப் பணியாளராகுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் குறிக்கப்பட்ட நபர் ஒவ்வொருவரும், அவர் பணியமர்த்தப்பட்ட தேதியில் அவருக்கு பொருந்தக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, அதே காலத்திற்காக, அதே ஊதியத்திற்கு மற்றும் ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை போன்றவற்றில் அதே உரிமை மற்றும் சிறப்புரிமைகளின் பேரில் அரசின் கீழ் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அவர் பணியமர்த்தப்பட்ட நாளில் அவர் கொண்டிருந்திருக்கும் அதே பொருட்பாடுகளையும் இந்தச் சட்டமானது நடைமுறையில் இருந்திராததைப் போன்று கொண்டிருத்தல் வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பணியாளர்களின் பணிமூப்பு மற்றும் பதவி உயர்வு மற்றும், கல்லூரியில் எழும் காலியிடங்களை நிரப்புவதற்கான முறையானது, அரசானது ஆணை மூலம், இதன் பொருட்டு குறிப்பிடப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

ஆணையாளரின் பணியமர்த்தம் மற்றும் இழப்பீடு வழங்குதல்.

6. (1) இச்சட்டத்தின்படி அரசிடம் நிலம் மற்றும் சொத்துக்கள் அளிக்கப்பெற்ற கல்லூரியில் உரித்தமுடைய நபர் ஒவ்வொருவரும், இதன் பின்பு வழங்கப்பட்டவாறான இழப்பீட்டினை பெறுவதற்கும், செலுத்தப்படுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நபரும் (2)–ஆம் உட்பிரிவின் கீழ் பணியமர்த்தப்பட்ட ஆணையாளருக்கு விண்ணப்பம் ஒன்றினை செய்தல் வேண்டும்.

(2) உரித்தமுடைய நபர்களுக்கும் செலுத்த வேண்டிய இழப்பீட்டினை முடிவு செய்யும் நோக்கத்திற்காக, அரசானது அறிவிக்கை வாயிலாக ஆணையாளர் ஒருவரை பணியமர்த்துதல் வேண்டும்.

(3) (2)-ஆம் உட்பிரிவின் கீழ் பணியமர்த்தப்பட்ட ஆணையாளரானவர், நிலம் மற்றும் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, 2013–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான உரிமை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தச் சட்டத்தின் 26, 27, 28 மற்றும் 29–ஆம் பிரிவுகளின் வகைமுறைகளை, பின்பற்றுதல் மற்றும் உரித்தமுடைய நபர்களுக்கு அதன்மீது செலுத்த வேண்டிய இழப்பீட்டினை முடிவு செய்தல் வேண்டும்.

மையச்சட்டம் 30/2013.

(4) ஆணையாளரானவர் அறைக்கலன்கள், தளவாடங்கள், இருப்புகள், துணைக்கருவிகள், வினைக்கருவிகள் போன்ற அசையும் சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் உரித்தமுடைய நபர்களுக்கு அதன்மீது செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டினை முடிவு செய்தல் வேண்டும்.

(5) அசையா மற்றும் அசையும் சொத்துக்களுக்காக உரித்தமுடைய நபர்களுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையினை இறுதி செய்த பிறகு, ஆணையாளரானவர் செலுத்தம் செய்வதற்காக அரசுக்கு அதனை பரிந்துரைத்தல் வேண்டும்.

தொகையினை பங்கீடு செய்தல்.

7. (1) இழப்பீட்டில் நபர்கள் பலர், உரித்தம் கோருமிடத்து, ஆணையாளரானவர், அவரது கருத்தில், இழப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு உரிமையுள்ள நபர்களை மற்றும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை தீர்மானிக்க வேண்டும்.

(2) 6–ஆம் பிரிவின்படி இழப்பீட்டுத் தொகை தீர்மானித்துள்ள போது, அதே அல்லது அதன் பகுதி எதையும் பங்கீடு செய்தல் அல்லது அதே அல்லது அதன் பகுதி எதையும் செலுத்தப்பட வேண்டிய நபர்களைப் பொறுத்து, பூசல் எதுவும் எழுந்தால், ஆணையாளர் அத்தகைய பூசலை நீதிமன்றத்தின் முடிவுக்காக குறித்தளிக்கலாம்.

தொகையைச் செலுத்துதல்.

8. (1) இழப்பீட்டுத் தொகை ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டு மற்றும் ஆணையாளரால் அரசுக்கு பரிந்துரை செய்யப்படுமிடத்து, அரசானது அத்தகைய தொகையை உரிமையுள்ள நபர் அல்லது நபர்களுக்கு செலுத்துதல் வேண்டும்.

(2) 6–ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரால் இழப்பீட்டுத் தொகையானது தீர்மானிக்கப்படுமிடத்து, அத்தகைய தீர்மானத்தின்படி அதற்கு உரிமையுள்ள நபர்களுக்கு தீர்மானிக்கப்பட்ட தொகையை அரசானது செலுத்துதல் வேண்டும் மற்றும் (3)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எதிர்பாரா நிகழ்வுகளினால் தடுக்கப்பட்டாலன்றி அவர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்.

(3) ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்டதான இழப்பீட்டுத் தொகைக்கு உரிமையுள்ள நபர்கள் அதைப் பெற இசைவளிக்கவில்லை எனில், அல்லது நிலம் மற்றும் சொத்துக்களை உடைமை மாற்றம் செய்வதற்கு தகுதியான நபர் இல்லை எனில் அல்லது இழப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு உரிமை மூலத்தில் பூசல் ஏதேனும் இருப்பின், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை, அரசானது நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தல் வேண்டும்.

வரம்புரையாக, உரித்தமுடையவரென ஒப்புக்கொள்ளப்பட்ட நபர் எவரும் இழப்பீட்டுத் தொகை போதுமான நிலை குறித்த எதிர்ப்புடன் அத்தகைய தொகையைப் பெறலாம்:

மேலும் வரம்புரையாக, இந்தச் சட்டத்தின்படி தீர்மானிக்கப்பட்ட தொகை எதனின் முழு அல்லது பகுதி எதையும் பெறும் நபரெவரின், அதற்கு சட்டபூர்வமாக உரிமையுள்ள நபருக்கு அதனை செலுத்தும் பொறுப்பை இதில் உள்ளடங்கிய எதுவும் பாதித்தல் ஆகாது.

நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையின் முதலீடு.

9. 8–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்தில் தொகை எதுவும் வைப்பீடு செய்யப்பட்டிருக்குமிடத்து, நீதிமன்றம் தாமாக முன்வந்தோ அல்லது அத்தகைய தொகையில் உரித்தமுடைய அல்லது உரித்தமுடையதாக கோரும் தரப்பினரால் அல்லது தரப்பினர் எவரின் பொருட்டு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அது பொருத்தமென கருதலாகும் அத்தகைய அரசு அல்லது அரசால் ஏற்பளிக்கப்பட்ட பிற கடனீட்டுப் பத்திரங்களில், அதை முதலீடு செய்வதற்காக ஆணையிடலாம் மற்றும் அத்தகைய முதலீடு அவற்றின் வட்டி அல்லது பிற வருமானங்கள் சேர்க்கப்பட்டு மற்றும் அத்தகைய தொகையானது வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொடர்புடைய நிலம் மற்றும் சொத்துக்களிலிருந்து அவர்கள் பெறக்கூடிய அல்லது அதற்கு ஏறக்குறையதான நலனை அதில் உரித்தமுடைய நபருக்கு அளிக்கலாகும் அத்தகைய முறையில் செலுத்தலாம்.

ஆணையாளரிடம் வைக்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கை

10. உரித்தமுடைய நபருக்கு எதிராக உரிமைக்கோரிக்கையை கொண்ட நபர் ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணையாளரிடம் அத்தகைய உரிமைக் கோரிக்கையை அளித்தல் வேண்டும்:

வரம்புரையாக, கூறப்பட்ட கால அளவான முப்பது நாட்களுக்குள் உரிமைக்கோருநர் உரிமைக் கோரிக்கையை அளிப்பதிலிருந்து போதுமான காரணத்தினால் தடுக்கப்பட்டதாக ஆணையாளர் மனநிறைவு அடைந்தால், அவர் மேலும் முப்பது நாட்களுக்குள் உரிமைக் கோரிக்கையை ஏற்கலாம். ஆனால், அதன் பிறகு ஏற்க இயலாது.

உரிமைக் கோரிக்கைகளின் ஏற்பு அல்லது மறுப்பு.

11. (1) உரிமைக் கோரிக்கைகளைப் பெற்றவுடன் ஆணையாளர் அதை ஆய்வு செய்ய வேண்டும், மற்றும் ஆய்விற்குப் பிறகு, உரிமைக் கோரிக்கையின் உண்மைத்தன்மையுடன் அவர் மனநிறைவு அடைந்தால், ஒவ்வொரு உரிமைகோருநரும் தனது உரிமை கோரிக்கைக்கான ஆதாரத்தை எந்த தேதியில் அல்லது அதற்கு முன் தாக்கல் செய்ய வேண்டிய அல்லது பங்கிட்டு அளிப்பதற்காக அரசுக்கு பரிந்துரைக்கப்பட்ட பலனிலிருந்து விலக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்தல் வேண்டும்.

(2) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியின் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் அறிவிக்கையானது ஆணையாளர் பொருத்தமெனக் கருதலாகும் ஆங்கில மொழி தினசரி நாளிதழின் ஒரு இதழ் மற்றும் தமிழ் மொழி தினசரி நாளிதழின் ஒரு இதழிலும் விளம்பரமாக அளித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய அறிவிக்கை ஒவ்வொன்றும் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் உரிமைகோருபவர் தனது கோரிக்கைக்கான ஆதாரத்தை, ஆணையாளரிடம் தாக்கல் செய்யும்படி அழைத்தல் வேண்டும்.

உரிமைக் கோருநர்களுக்கு ஆணையாளரால் பணத்தை பிரித்தளிக்கப் படுதல்.

12. 11–ஆம் பிரிவின்படி உரிமைக் கோரிக்கை ஒன்றை ஏற்றுக் கொண்டபிறகு, உரிமைக் கோரிக்கைத் தொகையை செலுத்துவதற்காக ஆணையாளர் அரசுக்கு பரிந்துரைத்தல் வேண்டும். அத்தகைய உரிமைக் கோரிக்கையின் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகையானது, அத்தகைய தொகை செலுத்தப்பட வேண்டிய நபர் அல்லது நபர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும் மற்றும் பணம் செலுத்துகையில் அத்தகைய உரிமைக் கோரிக்கை தொடர்பாக உரித்தமுடைய நபரின் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

சட்டமானது அனைத்து பிற சட்டங்களை விட மேலோங்கி–யிருத்தல்.

13. தற்போது நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற அமைப்பு எதனின் தீர்ப்பாணை அல்லது ஆணையில் உள்ளடங்கிய அதனுடன் முரண்பாடான எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் வகைமுறைகளானது மேலோங்கி நிற்றல் வேண்டும்.

விளக்கம்.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக "சட்டம்" என்பது தீர்ப்பு, ஒப்பந்தம், தீர்வு, முறை ஆவணம் அல்லது சேவை ஒப்பந்தம் எதையும் உள்ளடக்கும்.

அரசால் ஏற்பளிப்பு செய்யப்பட்டாலன்றி ஒப்பந்தங்களின் செயல்பாடு முடிவுறுதல்.

14. (1) உரித்தமுடைய நபரினால் சேவை, விற்பனை அல்லது வழங்குகை எதற்காகவும் செய்யப்பட்ட மற்றும் குறிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் நடைமுறையில் உள்ள ஒப்பந்தம் ஒவ்வொன்றும் குறிக்கப்பட்ட நாளிலிருந்து நூற்று எண்பது நாட்கள் முடிவடையும் நாளிலிருந்து, அத்தகைய ஒப்பந்தம் காலாவதியாகும் முன், அரசால் எழுத்துப்பூர்வமாக, ஏற்பளிக்கப்பட்டாலன்றி, செல்லாற்றல் அற்றுபோதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஒப்பந்தத்தை ஏற்பளிக்கையில் அரசு பொருத்தமெனக் கருதும் அத்தகைய திருத்தங்களை அல்லது மாற்றங்களை செய்யலாம்.

வரம்புரையாக, அரசு ஒப்பந்தம் ஒன்றை ஏற்பளிக்க தவிர்த்தல் கூடாது மற்றும் அத்தகைய ஒப்பந்தம் அளவுக்கு மேற்பட்ட பொறுப்பு வாய்ந்த அல்லது தவறான எண்ணத்தில் செய்யப்பட்டுள்ளதாக அல்லது கல்லூரியின் நலனுக்கு தீங்கு விளைவிப்பதாக மனநிறைவு அடைந்தாலன்றி ஒப்பந்தம் ஒன்றில் மாற்றத்தையோ அல்லது திருத்தத்தையோ அரசு செய்தல் கூடாது.

(2) அரசானது, ஒப்பந்தம் ஒன்றை ஏற்பளிப்பதை தவிர்க்ககூடாது மற்றும் ஒப்பந்தத்தின் தரப்பினருக்கு கேட்பதற்கான நியாயமான வாய்ப்பை வழங்கினாலன்றி மற்றும் ஒப்பந்தத்தை ஏற்பளிக்க மறுப்பதற்கான அல்லது அதில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்வதற்கான காரணங்களை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்தாலன்றி அதில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் எதையும் செய்தல் கூடாது.

தண்டங்கள்.

15. (a) கல்லூரியின் ஒரு பகுதியாகும் சொத்து எதனையும் அவரது உடைமை, பொறுப்பு அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள, அரசிடமிருந்து அல்லது அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரிடமிருந்தும் அத்தகைய சொத்தினை தவறாக நிறுத்தி வைக்கும் நபரெவரும்; அல்லது

(b) கல்லூரியின் ஒரு பகுதியாகும் சொத்து எதனையும் தவறான முறையில், அடைய அல்லது தக்க வைத்துக் கொண்ட அல்லது அவரது உடைமை பொறுப்பு அல்லது கட்டுபாட்டில் இருக்கலாகும் அத்தகைய கல்லூரி தொடர்பான ஆவணம் எதையும் வேண்டுமென்றே அரசிடம் அல்லது அரசு குறிப்பிடும் நபர் எவருக்கும் கொடுக்க மறுக்கும் அல்லது அளிக்கத் தவறும், கல்லூரி தொடர்பான அவர் பொறுப்பில் உள்ள சொத்து, கணக்குப்புத்தகம், பதிவேடு அல்லது பிற ஆவணங்கள் எதையும் அரசிடம் அல்லது அரசால் குறிப்பிடப்படும் நபர் எவரிடமும் வழங்கத் தவறும் நபரெவரும்; அல்லது

(c) கல்லூரியின் ஒரு பகுதியாகும் சொத்து எதனையும் தவறாக அகற்றும் அல்லது அழிக்கும், அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் பொய்யானதென அல்லது மொத்தத்தில் துல்லியமற்றதென அவர் அறியும் அல்லது அறிய நியாயமான காரணம் கொண்டிருக்கும் உரிமைக் கோரிக்கை எதையும் செய்யும் நபரெவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறை தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் அல்லது இவ்விரண்டுடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

16. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், அரசுக்கு அல்லது அரசு அலுவலர் எவருக்கும், எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

அதிகாரங்களின் ஒப்படைவு.

17. (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக 18–ஆம் பிரிவின் கீழுள்ள அதிகாரத்தைத் தவிர, இந்தச் சட்டத்தின்படி அதனால் செயல்படுத்தக்கூடிய அனைத்து அல்லது எந்தவொரு அதிகாரத்தை, நபர் அல்லது நபர்கள் எவருக்கும் ஒப்படைவு செய்யலாம்.

(2) (1)–ஆம் உட்பிரிவின் கீழ் அதிகார ஒப்படைவு எதுவும் செய்யப்படும் போது, அத்தகைய அதிகார ஒப்படைவு செய்யப்பட்ட நபர், அரசின் வழிகாட்டுதல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் செயல்படுதல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

18. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்பாடுகள் எதுவும் எழுமானால், அரசு, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் இடர்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ, உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, அத்தகைய ஆணை எதுவும் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு முடிந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

அறிவிக்கையின் தொடக்கம் மற்றும் சட்டப்பேரவையின் முன் வைத்தல்.

**19.** (1) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப்பேரவை அத்தகைய அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது சட்டமன்றப்பேரவை அந்த அறிவிக்கை அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்கு பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லும் தன்மைக்கும் குந்தகம் இன்றி இருத்தல் வேண்டும்.

**இணைப்புப் பட்டியல்**

[2(b)–ஆம் பிரிவைக் காண்க]

நிலம் மற்றும் கட்டடங்களின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| வட்டம் | : | ஈரோடு |
| நகரம் | : | ஈரோடு |
| புல எண்கள் | : | 266, 267, 268, 269 மற்றும் 272 |
| மொத்த பரப்பளவு | : | 52 ஏக்கர் |
| எல்லைகள் | : | கிழக்கு – சாலை புல எண்கள். 253, 255, 265<br>மேற்கு – புல எண்கள். 270, 271, 681<br>தெற்கு – புல எண்கள். 273, 274, 483, 484<br>வடக்கு – கி. எண். 35 ஈரோடு |
| கட்டமைப்புகள் | : | 11–தரை தள கட்டடங்கள்; மற்றும்<br>3–தரை தளம் + முதல் தள கட்டடங்கள் |

**நோக்கக் காரண விளக்கவுரை.**

நிலம் மற்றும் பணமாக பொது மக்கள் மற்றும் அரசிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகளின் உதவியுடன் மகாஜன பள்ளி குழுமத்தால், 1954–ஆம் ஆண்டு ஈரோடு, சிக்கய்ய நாயக்கர் கல்லூரியானது நிறுவப்பட்டது. கூறப்பட்ட குழுமமானது, 12.07.1954 அன்று ஈரோட்டில் 52 ஏக்கர் நிலப்பரப்பில், "மகாஜன கல்லூரி" என்ற பெயரில் கல்லூரியை தொடங்கியது. பின்னர் 1959–ஆம் ஆண்டில் இக்கல்லூரியானது "சிக்கய்ய நாயக்கர் மகாஜன கல்லூரி" என மறுபெயரிடப்பட்டது மற்றும் 1970–ஆம் ஆண்டில் "சிக்கய்ய நாயக்கர் கல்லூரி" என மீண்டும் மறுபெயரிடப்பட்டது.

2. மகாஜன பள்ளி குழுமம் "சிக்கய்ய நாயக்கர் மேலாண்மை குழுமம்" என்ற பெயரில் ஒரு குழுமத்தை உருவாக்கியது மற்றும் 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) கீழ் ஒரு சங்கமாக அதனை பதிவு செய்தது. கூறப்பட்ட சங்கமானது செயல்படாமல் போனதால், ஈரோடு மாவட்டப் பதிவாளர், சங்கங்களின் பதிவாளரிடமிருந்து அதன் பெயரை நீக்கம் செய்து மற்றும் 1995 மே 3–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** அதன் அறிவிப்பினை வெளியிட்டார் மற்றும் அந்தத் தேதியிலிருந்து சங்கம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

3. இதற்கிடையில், கூறப்பட்ட கல்லூரியின் அப்போதைய மேலாண்மைக் குழுவிற்கு எதிரான நிதி முறைகேடுகள் மற்றும் ஒழுங்கற்ற நிர்வாகம் குறித்த புகார்களின் பேரில் கல்லூரிக் கல்வி இயக்குநர், 02.09.1985–ஆம் தேதியிட்ட கல்வித்துறை, அரசாணை (நிலை) எண்.1021ஐ பயன்படுத்தி, மற்றவற்றுக்கிடையில் 09.01.1998–லிருந்து கூறப்பட்ட கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்க கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநருக்கு அதிகாரம் அளித்தார். 2002–ஆம் ஆண்டின் போது, 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்குமுறை சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 19/1976), 14–A–ஆம் பிரிவின் கீழ் மாநில அரசு, கூறப்பட்ட கல்லூரியின் மேலாண்மையை இடைநீக்கம் செய்து, கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரை தனி அலுவலராக நியமனம் செய்தது.

4. அதன் பின்பு, கூறப்பட்ட குடியரசுத் தலைவர், சட்டம் 19/1976–இன் 30(1)–ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்ட கல்லூரியின் நிர்வாகமானது, ஆரம்பத்தில், 19.12.2002–லிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு மாநில அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது மற்றும் கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வியின் மண்டல இணை இயக்குநர், கல்லூரியின் மேலாண்மையை நடத்த பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். குறிப்பிட்ட கால இடைவெளியில், கூறப்பட்ட சட்டத்தை திருத்துவதன் மூலம், அவ்வப்போது கூறப்பட்ட கல்லூரியின் மேலாண்மை, தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்பட்டு, இன்னும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. கூறப்பட்ட கல்லூரியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதியும், பொது நலன் கருதியும், கூறப்பட்ட கல்லூரியானது தற்போது அரசுக்கு மாற்றப்படலாம் மற்றும் ஒப்படைக்கலாம் என கருதப்படுகிறது. எனவே, அதன் நோக்கத்திற்காக சட்டத்தை இயற்ற அரசானது முடிவு செய்துள்ளது.

5. இந்த சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.